**செ. கு. எண்**: 272 **நாள்**: 02.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.8.2012

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மஸ்தூராக பணியாற்றி வந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டியை அடுத்த வடக்கு அம்மாபட்டியைச் சேர்ந்த திரு. ஜெகந்நாதன் அவர்கள் 31.7.2012 அன்று கோவில்பட்டி அருகே உள்ள மினிக்கியூர் ஊராட்சியில் மின்கம்பத்தில் பணி செய்து கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

திரு. ஜெகந்நாதன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்கம்பத்தில் பராமரிப்பு பணியை மேற்கொண்டிருந்தபோது உயிரிழந்த மின்சார வாரிய ஊழியர் திரு. ஜெகந்நாதன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**